## சுருக்கம்

16 மாநகராட்சிகள் – நகரமயமாதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், ஓசூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், ஆவடி, பெருநகர சென்னை மாநகராட்சி, கும்பகோணம், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் சிவகாசி ஆகிய மாநகராட்சிகளின் எல்லைகளை விரிவாக்கம் செய்தல் – உத்தேச முடிவு – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண்.201** | **நாள் 31.12.2024**

**திருவள்ளுவர் ஆண்டு 2055**
**குரோதி, மார்கழி 16**
**படிக்கப்பட்டன:**

(1) அரசாணை (நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 23.11.2023.

(2) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.5134/2023/A4, நாள் 21.12.2024.

(3) கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.B1/04/2024, நாள் 21.12.2024.

(4) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.2209/2024/அ2, நாள் 20.12.2024.

(5) ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.926/2022/அ4, நாள் 21.12.2024.

(6) கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.9993/2014/எப்1, நாள் 16.12.2024.

(7) கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.3637/2021, நாள் 21.12.2024.

(8) மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.2044/2024/அ2, நாள் 21.12.2024.

(9) சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.1209/2024/அ7, நாள் 21.12.2024.

(10) திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.1500/2024/அ8, நாள் 21.12.2024.

(11) திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.2020/2024/அ2, நாள் 20.12.2024.

(12) திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.1800/2024/அ3, நாள் 20.12.2024.

(13) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.2091/2024/A3, நாள் 19.12.2024.

(14) தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.2431/ 2024/ஊநி1, நாள் 21.12.2024.

(15) விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் எண்.எப்1/89/ 2/2024, நாள் 20.12.2024.

******

ஆணை:

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2021-22 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, பிறவற்றுடன் கீழ்க்காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:-

"2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021 ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புரங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளை நகராட்சியாகவும், அதேபோன்றே மாநகராட்சிகள், நகராட்சிகளில் சிலவற்றை விரிவாக்கம் செய்திடவும் தொடர்ந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன.

தற்போதுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புரமாக மாறி வருகின்ற இந்த பகுதிகளிலும் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகிறது".

2. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு, அதாவது, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை திறம்படவும், முழுஅளவிலும் வழங்குதல் (in an efficient and comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அருகருகே அமைந்துள்ள ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை இணைப்பதன் மூலம் புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், எல்லைகளை விரிவாக்கம் செய்தல் போன்றவற்றை ஆய்வு செய்து தக்க செயற்குறிப்புகளை உருவாக்குதல், பரிந்துரைகளை அளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுவொன்றை அமைத்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. இதனைத் தொடர்ந்து, உயர்நிலைக்குழு, பல்வேறு தேதிகளில் கூடி இப்பொருண்மைகள் மீது விரிவான ஆலோசனைகள்/விவாதங்களை மேற்கொண்டது. ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு, புதிய உள்ளாட்சி

அமைப்புகளை உருவாக்குதல், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகள் விரிவாக்கம் தொடர்பாக, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை திறம்படவும், முழுஅளவிலும் வழங்குதல் (in an efficient and comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு நிலைகளைச் சேர்ந்த அலுவலர்கள் போன்ற தொடர்புடைய அனைத்து தரப்பினரின் (Stakeholders) கோரிக்கைகள்/கருத்துகள் போன்றவை உயர்நிலைக்குழுவின் பல்வேறு கூட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு, விவாதிக்கப்பட்டு பல்வேறு தற்காலிக செயற்குறிப்புகள் (Tentative Proposals) உருவாக்கப்பட்டன.

4. இதனடிப்படையில், இப்பொருள் தொடர்பான பல்வேறு பொருண்மைகள் குறித்து உயர்நிலைக் குழுவால் 18.12.2024 அன்று காணொளி வாயிலாக 28 மாவட்ட ஆட்சியர்களுடன் இறுதி ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

5. இந்நிலையில், கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், ஓசூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், ஆவடி, பெருநகர சென்னை மாநகராட்சி, கும்பகோணம், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் சிவகாசி ஆகிய 16 மாநகராட்சிகளின் எல்லைகளை விரிவாக்கம் செய்வது குறித்து மேலே 2 முதல் 15 வரை படிக்கப்பட்ட கடிதங்களில் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்பிவைத்துள்ளனர். இச்செயற்குறிப்புகளின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

**(I) கோயம்புத்தூர் மாநகராட்சி:**

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளுக்கு அருகில் அமைந்துள்ள மதுக்கரை நகராட்சி, பேரூர், வேடபட்டி, இருகூர், வெள்ளலூர் ஆகிய 4 பேரூராட்சிகள், நீலாம்பூர், மயிலம்பட்டி, சின்னியம்பாளையம், குருடம்பாளையம், அசோகபுரம், கீரணத்தம், சோமையம்பாளையம், மலுமிச்சம்பட்டி, சீரப்பாளையம் ஆகிய 9 ஊராட்சிகள் என மொத்தம் 14 உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள்தொகை அதிகரிப்பானது 244 விழுக்காடு வரையிலும், குடியிருப்புகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பானது 231 விழுக்காட்டிற்கு மேலாகவும் உள்ளது. மேலும், இப்பகுதிகளின் வணிக மற்றும் தொழில் வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்குறிப்பிடப்பட்டுள்ள 14 உள்ளாட்சி அமைப்புகளையும் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கலாம்.

**(II) கடலூர் மாநகராட்சி:**

கடலூர் மாநகராட்சிப் பகுதியினை சுற்றி தொழிற்பேட்டை, மீன்பிடி துறைமுகம், தேவநாத சுவாமி திருக்கோவில், சிறுதொழிற்சாலைகளும் மற்றும் வளர்ச்சியடைந்த குடியிருப்புப் பகுதிகளும் அதிக அளவில் அமைந்துள்ளன. இப்பகுதிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்படும் நிலையில் அவற்றில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் சிறப்பாக மேம்படுத்த ஏதுவாகும். எனவே, கடலூர் மாநகராட்சிக்கு அருகில் அமைந்துள்ள பெரியகங்கணாங்குப்பம், குண்டுஉப்பலவாடி, பச்சையாங்குப்பம், குடிகாடு, கடலூர் ஓ.டி., கரையேரவிட்டகுப்பம், அரிசிபெரியாங்குப்பம், திருவந்திபுரம், பாதிரிக்குப்பம், தோட்டப்பட்டு, கோண்டூர், நத்தப்பட்டு, மற்றும் மருதாடு ஆகிய 13 கிராம ஊராட்சிகளையும் கடலூர் மாநகராட்சியுடன் இணைக்கலாம்.

**(iii) திண்டுக்கல் மாநகராட்சி:**

அடியனூத்து, பாலகிருஷ்ணாபுரம், செட்டிநாயக்கன்பட்டி, குரும்பப்பட்டி, முள்ளிப்பாடி, பள்ளபட்டி, சீலப்பாடி மற்றும் தோட்டனூத்து ஆகிய 8 ஊராட்சிகள் திண்டுக்கல் மாநகராட்சிக்கு மிக அருகில் அமைந்துள்ளன. இவ்வூராட்சிகளின், குடியிருப்புகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பானது 23 முதல் 88 விழுக்காட்டிற்கும் மேலாக உள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகையைக் காட்டிலும் இவ்வூராட்சிகளில் தற்போது 31 முதல் 100 விழுக்காடு வரையில் கூடுதலாக மக்கள் தொகை உள்ளது. மேலும், இவ்வூராட்சிகளில் பெரும்பான்மையினர் வேளாண்மையல்லாத தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 8 கிராம ஊராட்சிகளையும் திண்டுக்கல் மாநகராட்சியுடன் இணைக்கலாம்.

**(iv) ஈரோடு மாநகராட்சி:**

ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளுக்கு அருகில் அமைந்துள்ள கதிரம்பட்டி, மேட்டுநாசுவம்பாளையம், 46 புதூர், லக்காபுரம் ஆகிய 4 ஊராட்சிகளின் மக்கள் தொகை, வணிகம், தொழில் வளர்ச்சி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4 கிராம ஊராட்சிகளையும் ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கலாம்.

**(v) கரூர் மாநகராட்சி:**

இம்மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள ஆண்டாங்கோயில் கிழக்கு ஊராட்சி மற்றும் ஏமூர் ஊராட்சி என இரண்டு ஊராட்சிகளிலும் கரூர் மாநகரில் உள்ள தொழிற்சாலைகள் போல் அமைந்துள்ளதால் கரூர் மாநகராட்சிக்கு இணையாக வளர்ந்து வருகின்றன. மேற்கண்ட இரண்டு ஊராட்சிகளும் மாநகராட்சியோடு இணைக்கப்படுவதால் மாநகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகள் ஊராட்சி பகுதிகளுக்கு சென்றடைவதால் இப்பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். மேலும், ஊராட்சிப் பகுதிகளில் குடியிருக்கும் பொதுமக்களின் வாழ்க்கை தரம் உயர்வதுடன் அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கும். இந்த மேம்பாட்டினால் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும் அனைத்து தரப்பு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். இவ்விரண்டு ஊராட்சிகளையும் கரூர் மாநகராட்சியுடன் இணைக்கும்போது பரப்பு 72.62 ச.கி.மீ ஆகவும், ஆண்டு வருமானம் சராசரியாக ரூ.83.57 கோடியாகவும் இருக்கும். எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 2 கிராம ஊராட்சிகளையும் கரூர் மாநகராட்சியுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யலாம்.

**(vi) ஓசூர் மாநகராட்சி:**

ஓசூர் மாநகராட்சிப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ள 7 ஊராட்சிகள் நகரமயமாதல் தன்மையை (Urban Characteristics) அதிகளவில் கொண்டுள்ளதாலும், இப்பகுதிகளில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதன் அவசியம் கருதியும், நகரின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டும், இப்பகுதியின் தொழிற்துறையின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டும் பின்வருமாறு 7 ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளை ஓசூர் மாநகராட்சியுடன் இணைக்க பரிந்துரைக்கப்படுகிறது:

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | இணைக்கப்படவுள்ள பகுதிகள் |
|---|---|---|
| 1 | பேகேபள்ளி | பேகேபள்ளி |
| 2. | நல்லூர் | நல்லூர் |
| 3. | ஒன்னல்வாடி | ஒன்னல்வாடி |
| 4. | கொத்தகொண்டபள்ளி | கொத்தகொண்டபள்ளி |
| 5. | பேரண்டப்பள்ளி | பேரண்டப்பள்ளி |
| 6. | சென்னசந்திரம் (பகுதி) | விஸ்வநாதபுரம் |
| 7. | தொரபள்ளி அக்ரஹாரம் (பகுதி) | i. குமுதேப்பள்ளி<br>ii. காந்தி நகர்<br>iii. எல்லம்மா கொத்தூர் |

**(vii) மதுரை மாநகராட்சி:**

கருப்பாயூரணி, ஒத்தக்கடை, நரசிங்கம், காதக்கிணறு, அரும்பனூர் (பகுதி), கொடிக்குளம் (பகுதி), செட்டிகுளம், கோவில்பாப்பாகுடி, ஆலாத்தூர், பேச்சிகுளம், விரகனூர், நாகமலைப்புதுக்கோட்டை, கரடிபட்டி, ஏற்குடி அச்சம்பத்து, துவரிமான், பெருங்குடி ஆகிய 16 ஊராட்சிகள் மற்றும் பரவை பேரூராட்சி ஆகிய 17 உள்ளாட்சி அமைப்புகள் மதுரையின் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ளன. இப்பகுதிகள் அடர்த்தியான மக்கள் தொகை கொண்டுள்ளன. இப்பகுதிகளில், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர்வடிகால் கட்டமைப்பிலும் தொடர்ந்து பல்வேறு சவால்கள் ஏற்பட்டு வரும் நிலையிலும், இவ்வூராட்சிகளின் மக்கட்தொகை பெருக்கத்தை கருத்தில் கொண்டும், ஊராட்சிகளுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், திட்டமிட்ட வளர்ச்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட திடக்கழிவு மற்றும் திரவக்கழிவு மேலாண்மைக்கு ஏதுவாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள 17 உள்ளாட்சி அமைப்புகளையும் மதுரை மாநகராட்சியுடன் இணைக்கலாம்.

**(viii) சேலம் மாநகராட்சி:**

சேலம் மாநகராட்சிக்கு அருகில் உள்ள அமானிகொண்டலாம்பட்டி, செட்டிசாவடி, கொண்டப்பநாய்க்கன்பட்டி, எருமாபாளையம், சன்னியாசிகுண்டு கிராம ஊராட்சிப் பகுதிகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும், திட்டமிட்ட வளர்ச்சிக்கும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 5 கிராம ஊராட்சிகளையும் சேலம் மாநகராட்சியுடன் இணைத்து எல்லைகளை விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம் மாநகரின் வளர்ச்சிக்கும் பொதுமக்களுக்கும் மிகுந்த பயன் உள்ளதாக அமையும்.

**(ix) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி:**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்கு அருகிலுள்ள மல்லியம்பத்து, கம்பரசம்பேட்டை, மருதாண்டாக்குறிச்சி, முத்தரசநல்லூர், அதவத்தூர், அல்லித்துறை, கே.கள்ளிக்குடி, குமாரவயலூர், நாச்சிக்குறிச்சி, புங்கனூர், சோமரசம்பேட்டை, குண்டூர், கிழ குறிச்சி, கும்பக்குடி (பகுதி–3 வது வார்டு முதல் 6 வார்டு வரை) நவல்பட்டு, (பகுதி–4வது வார்டு முதல் 15 வார்டு வரை), அப்பாதுரை, தாளக்குடி, வாளாடி, நெருஞ்சலக்குடி, சூத்தூர், மாதவபெருமாள்கோவில், பிச்சாண்டார்கோவில் ஆகிய 22 கிராம ஊராட்சிகள் தற்போது நகர்ப்புர பகுதிகளுக்கு இணையாக வளர்ச்சியடைந்து வருகின்றன. எனவே, இப்பகுதிகளில் மக்களுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள்

செய்வதற்கும், திட்டமிட்ட வளர்ச்சிக்கும் இம்மாநகராட்சி எல்லைகளை விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 22 கிராம ஊராட்சிகள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைக்கப்படுவதன் மூலம் இப்பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள், உயர் கட்டமைப்பு வசதிகள், மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கவும் ஏதுவாகும்.

**(x) திருப்பூர் மாநகராட்சி:**

திருப்பூர் மாநகராட்சி எல்லைக்கு அருகிலுள்ள அவிநாசி வட்டத்திற்குட்பட்ட கணியம்பூண்டி மற்றும் பொங்கலூர் வட்டத்திற்குட்பட்ட நாச்சிபாளையம் ஆகிய கிராம ஊராட்சிகள் தற்போது நகரப் பகுதிகளுக்கு இணையாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. எனவே, இப்பகுதி மக் களுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும், திட்டமிட்ட வளர்ச்சிக்கும் திருப்பூர் மாநகராட்சியுடன் மேற்குறிப்பிடப்பட்ட 2 கிராம ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சியின் எல்லைகளை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம், மாநகரின் வளர்ச்சிக்கும் பொதுமக்களுக்கும் மிகுந்த பயன் உள்ளதாக அமையும்.

**(xi) ஆவடி மாநகராட்சி:**

2019 ஆம் ஆண்டு அமைத்துருவாக்கப்பட்ட ஆவடி மாநகராட்சியானது 65 சதுர கிமீ பரப்பளவைக் கொண்டதாகும். ஆவடி மாநகராட்சியுடன் பூவிருந்தவல்லி, திருவேற்காடு, திருநின்றவூர் ஆகிய மூன்று நகராட்சிகளும், மற்றும் கருணாகரச்சேரி, நடுக்குத்தகை, நெமிலிச்சேரி, மோரை, பாலவீடு, வெள்ளானூர், அயப்பாக்கம், காட்டுப்பாக்கம், கண்ணப்பாளையம், சோராஞ்சேரி, பாணவேடுதோட்டம், சென்னீர்குப்பம், நசரத்பேட்டை, பாரிவாக்கம், வரதராஜபுரம், அகரமேல், மேப்பூர் ஆகிய 17 கிராம ஊராட்சிகளை இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி நகராட்சி மற்றும் ஊராட்சிகளை இணைத்த பிறகு சுமார் 181.82 சதுர கிமீ. பரப்பளவில் ஆவடி மாநகராட்சி அமையும். பூவிருந்தவல்லி மற்றும் திருவேற்காடு நகராட்சிகள், சென்னை – பெங்களூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளன. பூவிருந்தவல்லியில் சென்னை மெட்ரோ இரயில் சேவை எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு தொடங்கப்படவுள்ளது. மற்றும் 100 வருட பழமையான அறிஞர் அண்ணா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அமைந்துள்ளது. மேலும், திருவேற்காடு புகழ்பெற்ற மாரியம்மன் கோவில் அமைந்துள்ள பாரம்பரிய (Heritage Town) நகரமாகும். திருநின்றவூர் நகராட்சியில் 108 வைணவ திருத்தலங்களில் ஒன்றான பக்தவச்சல பெருமாள் கோவில் அமைந்துள்ளது. மேலும், பூவிருந்தவல்லி, திருநின்றவூர், மோரை, வெள்ளனூர் பகுதிகளை இணைக்கும் வெளிவட்டச் சாலை (OUTER RING ROAD வண்டலூர் முதல் மாதவரம் வரை) அமைந்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 20 உள்ளாட்சி அமைப்புகளையும் ஆவடி மாநகராட்சியுடன் இணைப்பதால் மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதுடன் அடிப்படை வசதிகளும் மேம்படும்.

**(xii) பெருநகர சென்னை மாநகராட்சி:**

பெருநகர சென்னை மாநகராட்சியானது, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 66.72 இலட்சம் மக்கள் தொகையையும், 426 சதுர கிமீ பரப்பளவையும் கொண்டதாகும். தற்போதுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியுடன், திருவள்ளூர் மாவட்டத்தின் எல்லைக்குள் அமைந்துள்ள அடையாளம்பட்டு மற்றும் வானகரம் ஆகிய கிராம ஊராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய

பரிந்துரைக்கப்படுகிறது. இவ்விரு கிராம ஊராட்சிகளின் பரப்பளவு சுமார் 15.77 சதுர கி.மீ. ஆகும் மற்றும் மக்கள் தொகை சுமார் 32,353 ஆகும். இவ்விணைப்பிற்கு பிறகு பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லை சுமார் 442 சதுர கி.மீ. ஆக விரிவாக்கம் அடையும் மற்றும் மொத்த மக்கள் தொகை 67,04,456 ஆக அதிகரிக்கும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள 2 கிராம ஊராட்சிகள் இணைப்பால் அப்பகுதி மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதுடன் அடிப்படை வசதிகளும் மேம்படும்.

**(xiii) கும்பகோணம் மாநகராட்சி:**

கும்பகோணம் மாநகராட்சிப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ள 12 ஊராட்சிகளில் நகரிய தன்மை, மாநகராட்சி எல்லைகளை ஒட்டி அமைந்துள்ளமை, மக்கள் தொகை வளர்ச்சி, குடியிருப்புகளின் வளர்ச்சி, விளைநில பகுதிகளின் சதவீதம் போன்ற காரணிகளை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதிகளை மட்டும் கும்பகோணம் மாநகராட்சியுடன் பின்வருமாறு இணைக்க பரிந்துரைக்கப்படுகிறது:

| வ. எண். | ஊராட்சியின் பெயர் | மாநகராட்சியுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்புப் பகுதிகள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அண்ணலக்ரஹாரம் | 1. அண்ணலக்ரஹாரம்<br>2. மாத்தி<br>3. திருமெய்ஞானம்<br>4.அரியதிடல்<br>5. முகுந்தநல்லூர் |
| 2 | அசூர் (பகுதி) | 1. அசூர்<br>2.வேளாக்குடி |
| 3 | பாபுராஜபுரம் (பகுதி) | 1. புளியஞ்சேரி<br>2. கீழக்கொட்டையூர்<br>3. மேலக்கொட்டையூர் |
| 4 | ஏரகரம் (பகுதி) | 1. மூப்பக்கோவில்<br>2. மேலக்காவேரி |
| 5 | கொரநாட்டுக்கருப்பூர் (பகுதி) | 1.சத்திரம் கருப்பூர்<br>2. சந்தனாள்புரம்<br>3. கொரநாட்டுக்கருப்பூர்<br>4. சின்னகருப்பூர் |
| 6 | பழவாத்தான்கட்டளை | 1. அம்பேத்கர் நகர்<br>2. அம்மாதோட்டம்<br>3. பழவாத்தான்கட்டளை<br>4. முத்துப்பிள்ளை மண்டபம்<br>5. கோமளவல்லிபேட்டை<br>6. குப்பன்குளம்<br>7.பிளாஞ்சேரி |
| 7 | பண்டாரவாடைபெருமாண்டி | 1. பெருமாண்டி<br>2. ஆட்டோ நகர்<br>3. சின்னம்மாள் கல்லறை |
| 8 | சாக்கோட்டை | 1. சாக்கோட்டை<br>2. ஸ்ரீரங்கராஜபுரம் |

| | | |
|---|---|---|
| | | 3. திருக்கலசநல்லூர்<br>4. அறிவேலி<br>5. கருப்பூர்<br>6. பதினொருவேலி |
| 9 | உள்ளூர் | 1. உள்ளூர்<br>2. செக்காங்கன்னி<br>3. கொடியான்தோட்டம் |
| 10 | உமாமகேஸ்வரபுரம் (பகுதி) | 1. சாரங்கபாணி பேட்டை<br>2. மலையிருப்பு<br>3. மருதாடி<br>4.மேலப்பிள்ளையான்பேட்டை |
| 11 | வலையப்பேட்டை (பகுதி) | 1. அம்மாபேட்டை<br>2. வலையப்பேட்டை<br>3. மேலசத்திரம் |
| 12 | தேப்பெருமாநல்லூர் (பகுதி) | 1. ஐந்து தலைப்பு வாய்க்கால்<br>2. அம்மாச்சத்திரம் |

**(xlv) தஞ்சாவூர் மாநகராட்சி:**

தஞ்சாவூர் மாநகராட்சி பகுதிக்கு அருகில் அமைந்துள்ள 14 ஊராட்சிகளில் நகரிய தன்மை, மாநகராட்சி எல்லைகளை ஒட்டி அமைந்துள்ளமை, மக்கள் தொகை வளர்ச்சி, விளைநிலப் பகுதிகளின் சதவீதம் போன்ற காரணிகளை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதிகளை மட்டும் தஞ்சாவூர் மாநகராட்சியுடன் பின்வருமாறு இணைக்க பரிந்துரைக்கப்படுகிறது:

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | மாநகராட்சியுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்புப் பகுதிகள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | இனாதுக்கான்பட்டி (பகுதி) | 1. துலுக்கம்பட்டி<br>2. கூத்தஞ்சேரி<br>3. இனாதுக்கான்பட்டி |
| 2 | கடகடப்பை (பகுதி) | கடகடப்பை |
| 3 | மணக்கரம்பை (பகுதி) | பள்ளியக்ரஹாரம் |
| 4 | மாரியம்மன்கோயில் | 1. ஆனந்தம் நகர்<br>2. எருக்கம்பள்ளம்<br>3. கௌதம்நகர்<br>4. ஞானம் நகர்<br>5. காட்டுத்தோட்டம் புதிய காலனி<br>6. பொன்னுசாமி மற்றும் அனிஷா நகர்<br>7. சுந்தரம் மற்றும் மீனாட்சி நகர்<br>8. மருங்கை<br>9. காடவராயன்குளம்<br>10. மீனாட்சி மற்றும் அருள் நகர்<br>11. மாரியம்மன்கோயில்<br>12. புன்னைநல்லூர்<br>13. புன்னைநல்லூர் ஆதிதிராவிடர் தெரு<br>14. மூப்பனார் தெரு |

| | | |
|---|---|---|
| 5 | மேலவெளி | 1. ஆப்ரஹாம் பண்டிதர் நகர்<br>2. ஆற்றங்கரை தெரு வடகால்<br>3. களிமேடு<br>4. காமாட்சிபுரம்<br>5. ராஜேந்திரபுரம்<br>6. மரவணப்பட்டு<br>7. முத்து மீனாட்சி நகர்<br>8. ராகவேந்திராநகர்<br>9. வெங்கடேஸ்வரா நகர்<br>10. சிங்கபெருமாள் குளம்<br>11. சிங்கபெருமாள் கோவில்<br>12. சுந்தரபாண்டி நகர்<br>13. சங்கரன்பேட்டை<br>14. ஜெபமாலைபுரம் |
| 6 | நாஞ்சிக்கோட்டை (பகுதி) | 1. மாதாக்கோட்டை<br>2. கூத்தஞ்சேரி<br>3. அஜீஸ்நகர் இபி காலனி<br>4. அன்னை சத்யா நகர்<br>5. வங்கி ஊழியர் காலனி<br>6. காவேரி நகர்<br>7. சிலோன் காலனி<br>8. ஒசாகர் மற்றும் பாபு காலனி<br>9. இந்திராநகர்<br>10. கல்யாணசுந்தரம் நகர்<br>11. கருணாவதி நகர்<br>12. மறியல்<br>13. மேலவஸ்தாச்சாவடி<br>14. பிளோமினா நகர்<br>15. போஸ்டல் காலனி<br>16. ராஜாளியார் நகர்<br>17. ரெத்தினசாமி நகர்<br>18. ஆர்.எம்.எஸ். காலனி<br>19. செந்தமிழ் நகர்<br>20.டீச்சர்ஸ் காலனி<br>21. வைரம் நகர்<br>22.நாஞ்சிக்கோட்டை |
| 7 | நீலகிரி | 1. வாண்டையார் காலனி<br>2. கலைஞர் நகர்<br>3. திருவள்ளுவர் நகர்<br>4. திருவேங்கடம் நகர்<br>5. மானோஜிப்பட்டி<br>6. நீலகிரி |

| | | |
|---|---|---|
| 8 | பிள்ளையார்பட்டி | 1. பிள்ளையார்பட்டி<br>2. வடக்கு ஆதிதிராவிடர் தெரு<br>3. எல்லம்மாள் காலனி<br>4. பூக்கொல்லை<br>5. மேலவஸ்தாச்சாவடி<br>6. பர்மாகாலனி<br>7. திருவள்ளுவர் நகர் |
| 9 | புதுப்பட்டிணம் | 1. கோரிக்குளம் புதுத்தெரு<br>2. கோரிக்குளம்<br>3. பாரதிதாசன் நகர்<br>4. தில்லை நகர்<br>5. ஜோதி நகர்<br>6. புதுப்பட்டிணம் |
| 10 | இராமநாதபுரம் | 1. இராமநாதபுரம்<br>2. உப்பரிகை மானோஜிப்பட்டி |
| 11 | விளார் | 1. இந்திரா நகர்<br>2. இந்திரா நகர் நியூ<br>3. சண்முகநாதன் நகர்<br>4. கலைஞர் நகர்<br>5. நாவலர் நகர்<br>6. ரெங்கநாதபுரம்<br>7. கண்காணியார் தோட்டம்<br>8. விளார் மெயின்<br>9. ஆதிதிராவிடர் காலனி<br>10. வாய்க்கால் அம்பலக்காரத்தெரு<br>11. விளார் |
| 12 | ஆலங்குடி (பகுதி) | அருள்மொழிப்பேட்டை |
| 13 | புலவர்நத்தம் (பகுதி) | பவானியம்மாள்புரம் |
| 14 | கத்தரிநத்தம் (பகுதி) | தளவாய்பாளையம் |

**(xv) தூத்துக்குடி மாநகராட்சி:**

சில்லாநத்தம் ஊராட்சியில் சிப்காட் தொழிற்பூங்கா மற்றும் அறைகலன்கள் பூங்கா அமைவதன் மூலம் இவ்வூராட்சி தொழில்மயமாகி வருவதை எடுத்துக்காட்டுகிறது. மேலும், 2025 ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கவுள்ள வின்ஃபாஸ்ட் மின்கல வாகனங்கள் தொழிற்சாலையின் மூலம் இப்பகுதியின் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிக்கும். மேலும், மாப்பிள்ளையூரணி, அய்யனடைப்பு, கோரம்பள்ளம், மறவன்மடம், முள்ளக்காடு மற்றும் குமாரகிரி ஆகிய ஊராட்சிகள் தூத்துக்குடி மாநகராட்சிக்கு மிக அருகில் அமைந்துள்ளன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 7 கிராம ஊராட்சிகளை தூத்துக்குடி மாநகராட்சியோடு இணைப்பதன் மூலம், அப்பகுதிகள் நீடித்த நகர்ப்புர வளர்ச்சி, மேலும் சிறப்பான நிருவாகம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பெறுவதற்கு ஏதுவாகும்.

**(xvi) சிவகாசி மாநகராட்சி:**

சிவகாசி மாநகராட்சி பகுதிகளுக்கு அருகில் அமைந்துள்ள நாரணாபுரம், பள்ளபட்டி, அனுப்பன்குளம், ஆனையூர், சாமிநத்தம், தேவர்குளம், சித்துராஜபுரம், விஸ்வநத்தம், செங்கமலநாச்சியார்புரம் ஆகிய 9 கிராம ஊராட்சிகள் மக்கள் தொகை, விவசாயம் சாரா தொழில்களில் ஈடுபட்டுள்ளோரின் சதவீதம், மக்கள் தொகை அடர்த்தி போன்ற நகர்ப்புர வளர்ச்சிக்கான காரணிகளை கொண்டுள்ளதால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 9 கிராம ஊராட்சிகளை சிவகாசி மாநகராட்சியுடன் இணைக்க பரிந்துரைக்கப்படுகிறது. இந்த எல்லை விரிவாக்கத்தின் மூலம் மாநகராட்சியின் பரப்பளவு 121.82 சதுர கிமீ, 35,2831 மக்கள் தொகை மற்றும் ஆண்டு வருமானம் ரூ.65.80 கோடியாக இருக்கும்.

6. மாநகராட்சிகளின் எல்லை விரிவாக்கம் தொடர்பான முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

(அ) மாநகராட்சிகளுடன் இணைக்க பரிந்துரைக்கப்படும் ஊராட்சிகள்/ பேரூராட்சிகள் போன்றவை நகரங்களின்/பெருநகரங்களின் நுழைவாயிலாக அமைந்துள்ளதுடன், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் ஈட்டித் தருகின்ற பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றை தங்களது பகுதிகளில் அமையப்பெற்றுள்ளன. இப்பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் ஏராளமானோர், சுற்றியுள்ள ஊராட்சிகளில் குடியிருந்து வருகின்றனர். இப்பகுதிகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும், திட்டமிட்ட வளர்ச்சிக்கும் நகர்ப்புரங்களின் எல்லையை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம் இப்பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

(ஆ) மாநகராட்சிகளின் எல்லைகளைச் சுற்றி அமைந்துள்ள பெரும்பாலான ஊரகப்பகுதிகள் நகர்ப்புர பகுதிகளுக்கு இணையான வளர்ச்சியை அடைந்து வருகின்றன. எனவே, இத்தகைய ஊரக பகுதிகளிலும், நகர்ப்புரங்களுக்கு இணையான வகையில் சாலைகள், குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை, பொது/சமுதாய பயன்பாட்டிற்கான நவீன கழிப்பிடங்கள், பாதாளச் சாக்கடை கட்டமைப்பு, ஆற்றல்மிகு தெருவிளக்குகள் போன்ற மக்களுக்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

(இ) வேகமாக நகரமயமாகிவரும்/வளர்ச்சிக்கேற்ற வகையில் பெரும்பாலான சிறிய உள்ளாட்சி அமைப்புகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதி/இடப்பற்றாக்குறை நிலவுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதி திட்டங்களை நிறைவேற்றுதல், மக்களுக்கான அடிப்படை வசதிப் பணிகள்/சேவைகளின் விரைவான, திறம்பட்ட செயலாக்கத்திற்கு தேவைப்படும் பொறியாளர்கள் உள்ளிட்ட பணியமைப்பு குறைந்த அளவிலேயே உள்ளது போன்றவற்றை களையவும் (to overcome) எல்லை விரிவாக்கம் அவசியமாகிறது.

(ஈ) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுடன் இவ்வாறு எல்லை விரிவாக்கம் செய்வதால், இணைக்கப்படும் பகுதிகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் குடியிருக்கும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளும் அவர்களுக்கு கிடைக்கும். இந்த மேம்பாட்டினால், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும், அனைத்து தரப்பு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

**7.** இந்நிலையில், அரசு, மேலே பத்தி 5-ல் உள்ளவாறான மாவட்ட ஆட்சித் தலைவர்களின் செயற்குறிப்புகளை, கவனமான பரிசீலனைக்குப் பின்னர் ஏற்று, கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், ஓசூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், ஆவடி, பெருநகர சென்னை மாநகராட்சி, கும்பகோணம், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் சிவகாசி ஆகிய 16 மாநகராட்சிகளுடன் முறையே அப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து மாநகராட்சிகளின் எல்லையை விரிவாக்கம் செய்ய உத்தேச முடிவு மேற்கொண்டு அவ்வாறே ஆணையிடுகிறது.

**8.** இதனடிப்படையில் உத்தேச விரிவுபடுத்தப்படும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 16 மாநகராட்சிகளுக்கான வார்டு எண்ணிக்கை மறுநிர்ணயம் செய்யப்பட்டு, வார்டு எல்லைகள் வரையறை செய்யப்பட்டு, மாநகராட்சி மன்றங்களுக்கான அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

**9.** இதுகுறித்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின், 3 ஆம் பிரிவின் வகைமுறைகளின்படி, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே மேற்குறிப்பிடப்பட்டுள்ள 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கை (ஆங்கிலத்தில்), 31.12.2024 ஆம் நாளிட்ட <u>தமிழ்நாடு அரசிதழின்</u> சிறப்பிதழில் வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா.கார்த்திகேயன்**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்:**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-01.
(இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-09.
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை-28.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-28.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-15.
தொடர்புடைய மாநகராட்சி/நகராட்சி ஆணையர்கள். (நகராட்சி நிருவாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (நகராட்சி நிருவாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர்கள், (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள் (பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-09.
மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை-09.
மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-09.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-09.
சட்டத்துறை, சென்னை-09.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை-106.
செயலாளர், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், அரும்பாக்கம், சென்னை-106.
அரசு முதன்மைச் செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், நகராட்சி நிருவாகம்
மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-09.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1 முதல் 7 மற்றும் அ.ந.2) துறை,
சென்னை-09.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## APPENDIX.

## NOTIIFICAITON.

In exercise of the powers conferred by sub-clause (i) of clause (a) of sub-section (2) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu hereby declares his intension to include the local areas specified in column (4) within the limits of Municipal Corporation specified in column (2), to the extent as specified in column (5) of the Table below:—

### THE TABLE.

| Sl. No. | Name of the Municipal Corporation. | Name of the Panchayat Union. | | Name of the Local Areas. | Extent of the local area. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | (5) |
| 1 | Coimbatore | | (i) | Madukkarai Municipal Council | Full |
| | | | (ii) | Perur Town Panchayat | Full |
| | | | (iii) | Vedappatti Town Panchayat | Full |
| | | | (iv) | Irugur Town Panchayat | Full |
| | | | (v) | Vellalur Town Panchayat | Full |
| | | Sulur | (vi) | Neelambur Village Panchayat | Full |
| | | | (vii) | Mylampatti Village Panchayat | Full |
| | | | (viii) | Chinniampalayam Village Panchayat | Full |
| | | Periyanaicken palayam | (ix) | Kurudampalayam Village Panchayat | Full |
| | | | (x) | Somayampalayam Village Panchayat | Full |
| | | | (xi) | Ashokapuram Village Panchayat | Full |
| | | Sarkarsama kulam | (xii) | Keeranatham Village Panchayat | Full |
| | | Madukkarai | (xiii) | Malumichampatti Village Panchayat | Full |
| | | | (xiv) | Seerappalayam Village Panchayat | Full |
| 2 | Cuddalore | Cuddalore | (i) | Arisipperiyankuppam Village Panchayat | Full |
| | | | (ii) | Karaiyeravittakuppam Village Panchayat | Full |
| | | | (iii) | Kudikkadu Village Panchayat | Full |
| | | | (iv) | Pachayankuppam Village Panchayat | Full |
| | | | (v) | Tiruvandipuram Village Panchayat | Full |
| | | | (vi) | Cuddalore O.T. Village Panchayat | Full |
| | | | (vii) | Gunduuppalavadi Village Panchayat | Full |
| | | | (viii) | Kondur Village Panchayat | Full |
| | | | (ix) | Marudadu Village Panchayat | Full |
| | | | (x) | Nathapattu Village Panchayat | Full |
| | | | (xi) | Padirikuppam Village Panchayat | Full |
| | | | (xii) | Periyakanganankuppam Village Panchayat | Full |
| | | | (xiii) | Thottapattu Village Panchayat | Full |
| 3 | Dindigul | Dindigul | (i) | Adiyanuthu Village Panchayat | Full |
| | | | (ii) | Balakrishnapuram Village Panchayat | Full |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (iii) | Chettinaickenpatti Village Panchayat | Full |
| | | | (iv) | Kurumbapatti Village Panchayat | Full |
| | | | (v) | Mullipadi Village Panchayat | Full |
| | | | (vi) | Pallapatti Village Panchayat | Full |
| | | | (vii) | Seelapadi Village Panchayat | Full |
| | | | (viii) | Thottanuthu Village Panchayat | Full |
| 4 | Erode | Erode | (i) | Kadhirampatti Village Panchayat | Full |
| | | | (ii) | Mettunasuvam Palayam Village Panchayat | Full |
| | | Modakkurichi | (iii) | 46 Pudur Village Panchayat | Full |
| | | | (iv) | Lakkapuram Village Panchayat | Full |
| 5 | Karur | Thanthoni | (i) | Andankoil East Village Panchayat | Full |
| | | | (ii) | Emur Village Panchayat | Full |
| 6 | Hosur | Hosur | (i) | Begapalli Village Panchayat | Full |
| | | | (ii) | Nallur Village Panchayat | Full |
| | | | (iii) | Onnalvadi Village Panchayat | Full |
| | | | (iv) | Kothakondapalli Village Panchayat | Full |
| | | | (v) | Chennasandiram Village Panchayat | Part (Viswanathapuram) |
| | | | (vi) | Thorapalli Agraharam Village Panchayat | Part (Kumudhepalli, Gandhi Nagar, Ellamma Kothur) |
| | | Shoolagiri | (vii) | Perandapalli Village Panchayat | Full |
| 7 | Madurai | Madurai East | (i) | Paravai Town Panchayat | Full |
| | | | (ii) | Karuppayurani Village Panchayat | Full |
| | | | (iii) | Othakadai Village Panchayat | Full |
| | | | (iv) | Narasingam Village Panchayat | Full |
| | | | (v) | Kathakinaru Village Panchayat | Full |
| | | | (vi) | Arumbanur Village Panchayat | Part (Subramaniapuram, Muniandipuram, Yanaimalai kuvari, A.P.Malaiyandipuram, Indira Colony) |
| | | | (vii) | Kodikulam Village Panchayat | Part (Malaichamipuram, Ayyappan Nagar, Vavval Thottam) |
| | | Madurai West | (viii) | Chettikulam Village Panchayat | Full |
| | | | (ix) | Kovilpappakudi Village Panchayat | Full |
| | | | (x) | Alathur Village Panchayat | Full |
| | | | (xi) | Petchikulam Village Panchayat | Full |
| | | Tiruparan kundram | (xii) | Viraganur Village Panchayat | Full |
| | | | (xiii) | Nagamalai Pudukottai Village Panchayat | Full |
| | | | (xiv) | Karadipatti Village Panchayat | Full |
| | | | (xv) | Erkudy Achampathu Village Panchayat | Full |
| | | | (xvi) | Thuvariman Village Panchayat | Full |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (xvii) | Perungudi Village Panchayat | Full |
| 8 | Salem | Panamarathu patti | (i) | Amanikondalampatti Village Panchayat | Full |
| | | Salem | (ii) | Chettichavadi Village Panchayat | Full |
| | | | (iii) | Kondappanaickenpatti Village Panchayat | Full |
| | | | (iv) | Erumapalayam Village Panchayat | Full |
| | | | (v) | Sanniyasigundu Village Panchayat | Full |
| 9 | Tiruchirappalli | Andhanallur | (i) | Malliampathu Village Panchayat | Full |
| | | | (ii) | Kambarasampettai Village Panchayat | Full |
| | | | (iii) | Marudhandakurichi Village Panchayat | Full |
| | | | (iv) | Mutharasanallur Village Panchayat | Full |
| | | Manigandam | (v) | Adhavathur Village Panchayat | Full |
| | | | (vi) | Allithurai Village Panchayat | Full |
| | | | (vii) | K.Kallikudi Village Panchayat | Full |
| | | | (viii) | Kumara Vayalur Village Panchayat | Full |
| | | | (ix) | Nachikurichi Village Panchayat | Full |
| | | | (x) | Punganur Village Panchayat | Full |
| | | | (xi) | Somarasampettai Village Panchayat | Full |
| | | Thiruverumbur | (xii) | Gundur Village Panchayat | Full |
| | | | (xiii) | Kilakurichy Village Panchayat | Full |
| | | | (xiv) | Kumbakudi Village Panchayat | Part (3rd ward to 6th ward) |
| | | | (xv) | Navalpattu Village Panchayat | Part (4th ward to 15th ward) |
| | | Lalgudi | (xvi) | Appadurai Village Panchayat | Full |
| | | | (xvii) | Thalakkudi Village Panchayat | Full |
| | | | (xviii) | Valadi Village Panchayat | Full |
| | | | (xix) | Nerunjalakkudi Village Panchayat | Full |
| | | Mannachanallur | (xx) | Koothur Village Panchayat | Full |
| | | | (xxi) | Madhavaperumal Koil Village Panchayat | Full |
| | | | (xxii) | Pitchandarkoil Village Panchayat | Full |
| 10 | Tiruppur | Avinashi | (i) | Kaniampoondi Village Panchayat | Full |
| | | Pongalur | (ii) | Nachipalayam Village Panchayat | Full |
| 11 | Avadi | | (i) | Poonamallee Municipal Council | Full |
| | | | (ii) | Tiruverkadu Municipal Council | Full |
| | | | (iii) | Tirunindravur Municipal Council | Full |
| | | Villivakkam | (iv) | Vellanur Village Panchayat | Full |
| | | | (v) | Ayappakkam Village Panchayat | Full |
| | | | (vi) | Palavedu Village Panchayat | Full |
| | | | (vii) | Morai Village Panchayat | Full |
| | | Poonamallee | (viii) | Nemilicheri Village Panchayat | Full |
| | | | (ix) | Nadukuthagai Village Panchayat | Full |
| | | | (x) | Kattupakkam Village Panchayat | Full |
| | | | (xi) | Senneerkuppam Village Panchayat | Full |
| | | | (xii) | Varadarajapuram Village Panchayat | Full |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (xiii) | Nazarethpettai Village Panchayat | Full |
| | | | (xiv) | Agaramel Village Panchayat | Full |
| | | | (xv) | Banaveduthottam Village Panchayat | Full |
| | | | (xvi) | Parivakkam Village Panchayat | Full |
| | | | (xvii) | Kannapalayam Village Panchayat | Full |
| | | | (xviii) | Soranjeri Village Panchayat | Full |
| | | | (xix) | Karunakaracheri Village Panchayat | Full |
| | | | (xx) | Meppur Village Panchayat | Full |
| 12 | Chennai | Villivakkam | (i) | Adayalampattu Village Panchayat | Full |
| | | | (ii) | Vanagaram Village Panchayat | Full |
| 13 | Kumbakonam | Kumbakonam | (i) | Annalagraharam Village Panchayat | Full |
| | | | (ii) | Asur Village Panchayat | Part (Velakudi, Asur) |
| | | | (iii) | Baburajapuram Village Panchayat | Part (Puliyancheri, Keelakottaiyur, Melakottaiyur) |
| | | | (iv) | Eraharam Village Panchayat | Part (Moopakovil, Melacauvery) |
| | | | (v) | Koranattukaruppur Village Panchayat | Part (Chatramkaruppur, Sandhanalpuram, Koranattukaruppur, Chinnakaruppur) |
| | | | (vi) | Palavathankattalai Village Panchayat | Full |
| | | | (vii) | Pandarvadaiperumandi Village Panchayat | Full |
| | | | (viii) | Sakkottai Village Panchayat | Full |
| | | | (ix) | Ullur Village Panchayat | Full |
| | | | (x) | Umamaheswarapuram Village Panchayat | Part (Sarangapani pettai, Malaiyiruppu, Maruthadi, Melapillayanpettai) |
| | | | (xi) | Valaiyapettai Village Panchayat | Part (Ammapettai, Valaiyapettai, Melachatram) |
| | | Thiruvidai marudur | (xii) | Thepperumanallur Village Panchayat | Part (Ainthu Thalaippu Vaikkal, Ammachatiram) |
| 14 | Thanjavur | Thanjavur | (i) | Inathukanpatti Village Panchayat | Part (Thulkanpatti, Koothanchery, Inathukanpatti) |
| | | | (ii) | Kadakadappai Village Panchayat | Part (Kadakadappai) |
| | | | (iii) | Manakkarambai Village Panchayat | Part (Palliyagharam) |
| | | | (iv) | Mariammankoil Village Panchayat | Full |
| | | | (v) | Melaveli Village Panchayat | Full |
| | | | (vi) | Nanjikottai Village Panchayat | Part (Mathankottai, Koothancheri, Ajeesh Nagar EB Colony, Annai Sathiya Nagar, Bankers Colony, Kavery Nagar, Ceylon |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | Colony, Husagar and Babu colony, Indira Nagar, Kalyanasundaram Nagar, Karunavathi Nagar, Mariyal, Melavasthachavadi, Philnomina Nagar, Postal Colony, Rajaiiyar Nagar, Rethinasami Nagar, RMS Colony, Senthamil Nagar, Teachers Colony, Vairam Nagar, Nanjikottai |
| | | | (vii) Neelagiri Village Panchayat | Full |
| | | | (viii) Pillaiyarpatti Village Panchayat | Full |
| | | | (ix) Pudupattinam Village Panchayat | Full |
| | | | (x) Ramanathapuram Village Panchayat | Full |
| | | | (xi) Vilar Village Panchayat | Full |
| | | Ammapet | (xii) Alangudi Village Panchayat | Part (Arulmozhipettai) |
| | | | (xiii) Pulavarnatham Village Panchayat | Part (Bhavani Ambalpuram) |
| | | | (xiv) Katharinatham Village Panchayat | Part (Thalavaipalayam) |
| 15 | Thoothukudi | Ottapidaram | (i) Sillanatham Village Panchayat | Full |
| | | Thoothukudi | (ii) Mappillaiurani Village Panchayat | Full |
| | | | (iii) Ayyanadaippu Village Panchayat | Full |
| | | | (iv) Korampallam Village Panchayat | Full |
| | | | (v) Maravanmadam Village Panchayat | Full |
| | | | (vi) Mullakadu Village Panchayat | Full |
| | | | (vii) Kumaragiri Village Panchayat | Full |
| 16 | Sivakasi | Sivakasi | (i) Anaiyur Village Panchayat | Full |
| | | | (ii) Sithurajapuram Village Panchayat | Full |
| | | | (iii) Viswanatham Village Panchayat | Full |
| | | | (iv) Naranapuram Village Panchayat | Full |
| | | | (v) Pallapatti Village Panchayat | Full |
| | | | (vi) Saminatham Village Panchayat | Full |
| | | | (vii) Sengamalanachiyarpuram Village Panchayat | Full |
| | | | (viii) Thevarkulam Village Panchayat | Full |
| | | | (ix) Anuppankulam Village Panchayat | Full |

Based on the above inclusion, wards will be divided for the next General election.

**2.** Notice is hereby given that, any person residing within the respective local area concerned in relation to this Notification or any local authority affected by the Notification related to it may submit objections, if any, in writing to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009. Such objections shall

be submitted within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette* and the objections received within the said period will be taken into consideration under clause (c) of sub-section (2) of section 3 of the said Act.

**D.KARTHIKEYAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//True Copy//**

**SECTION OFFICER.**